## வடகிழக்குப் பருவமழை: சென்னை வேளச்சேரி – அடையாறு – பள்ளிக்கரணை – ஆதம்பாக்கம் பகுதிகளில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, வேளச்சேரி பறக்கும் ரயில் திட்ட சாலைப் பகுதியில் கால்வாய் தூர்வாரப்பட்டுள்ளதால் அப்பகுதி பாலத்தின் 6 கண்கள் வழியே நீர் தடையின்றி செல்வதை நேற்று (21.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அடையாறு காமராஜ் அவன்யூ, முதல் தெரு சென்னை ஆரம்பப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையல் கூடத்தை நேற்று (21.10.2025) நேரில் பார்வையிட்டு அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தார். உடன் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



சென்னை சோழிங்கநல்லூர் நாராயணபுரம் ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை 44.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 கண் நீர் ஒழுங்கியுடன் 850 மீ. நீளத்தில் 1,100 கன அடி வெள்ள நீர் கடத்தும் திறனுடைய இரண்டு கண் கொண்ட கூடுதல் பெரு மூடு வடிகால்வாய் அமைக்கப்பட்டதால் நீர் தடையின்றி செல்வதை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2025) சோழிங்கநல்லூர் பகுதியில் கீழ்கட்டளை உபரி நீர் கால்வாயில் ராட்சத இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.


